# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 02 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2022.09.07 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# கண்டிய திருமண, மணநீக்கம்
# (திருத்தம்)

**(113 ஆம் அத்தியாயமான) கண்டிய திருமண, மணநீக்கச் சட்டத்தைத்**
**திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்*
*அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2 :*** *இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (113 ஆம் அத்தியாயமான) கண்டிய திருமண, மணநீக்கச் சட்டத்தின் பாகம் II இனை நீக்குகின்றதுடன் அதன் சட்டப்பயனானது பராயமடையாதவொருவரின் திருமணமொன்றிற்கான தகுதி வாய்ந்த அதிகாரியொருவரின் சம்மதத் தேவைப்பாட்டை நீக்குவதற்குமாகும்; அத்துடன் அதன்மூலம் கண்டியச் சட்டத்திற்கு அமைந்தவர்களான எல்லா ஆட்களுக்கும் குறைந்தபட்ச திருமண வயதாக பதினெட்டு வயதை ஆக்குவதாகும்.*

***வாசகம் 3 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் வாசகம் 2 இனால் செய்யப்பட்ட திருத்தத்துக்கு விளைவாந்தன்மையினதாகும்.*

***வாசகம் 4 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் வாசகம் 2 இனால் செய்யப்பட்ட திருத்தத்துக்கு விளைவாந்தன்மையினதாகும்.*

***வாசகம் 5 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் வாசகம் 2 இனால் செய்யப்பட்ட திருத்தத்துக்கு விளைவாந்தன்மையினதாகும்.*

***வாசகம் 6 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் வாசகம் 2 இனால் செய்யப்பட்ட திருத்தத்துக்கு விளைவாந்தன்மையினதாகும்.*

***வாசகம் 7 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் வாசகம் 2 இனால் செய்யப்பட்ட திருத்தத்துக்கு விளைவாந்தன்மையினதாகும்.*

***வாசகம் 8 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவை மாற்றீடு செய்கின்றதுடன் வாசகம் 2 இனால் செய்யப்பட்ட திருத்தத்துக்கு விளைவாந்தன்மையினதாகும்.*

***வாசகம் 9 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயன் வாசகம் 2 இனால் செய்யப்பட்ட திருத்தத்தை அடுத்து "பராயமடையாதவர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்குவதற்குமாகும்.*

**கண்டிய திருமண, மணநீக்கம்**
**(திருத்தம்)**

*ச.வ.- ஓ. 73/2021*

## *(113 ஆம் அத்தியாயமான) கண்டிய திருமண, மணநீக்கச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்*

***1***. இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின்        ஆம் இலக்க, கண்டிய திருமண, மணநீக்க (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*113 ஆம் அத்தியாயத்தின் பாகம் II இனை நீக்குதல்*

***2***. (இதனகத்துப்பின்னர் ‘‘முதன்மைச் சட்டவாக்கம்’’ எனக் குறிப்பீடு செய்யப்படும்) (113 ஆம் அத்தியாயமான) கண்டிய திருமண, மணநீக்கச் சட்டத்தின் பாகம் II (8, 9, 10, 11, 12, 13, 14 மற்றும் 15 ஆகிய பிரிவுகள்) இத்தால் நீக்கப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்*

***3***. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (6) ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியை நீக்கி விடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அதன் (7) ஆம் பந்தியில்–

(அ) அதன் (அ) என்னும் உட்பந்தியில், ‘‘சரியானவையுமாக உள்ளனவென்றும்;’’ என்னும் சொற்களுக்குப் பதிலாக, ‘‘சரியானவையுமாக உள்ளனவென்றும்; அத்துடன்’’ என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) அதன் (ஆ) என்னும் உட்பந்தியில், ‘‘வேறு சட்டமுறையான தடங்கல் எதுவும் இல்லையென்றும்;’’ என்னும் சொற்களுக்குப் பதிலாக, ‘‘வேறு சட்டமுறையான தடங்கல் எதுவும் இல்லையென்றும்.’’ என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) அதன் (இ) ம்ற்றும்(ஈ) என்னும் உட்பந்திகளை நீக்கிவிடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு, அதன் (5) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

“(5) (அ) இப்பிரிவின் (3) (அ) (i) என்னும் பந்தியில் அல்லது (4) (அ) (i) என்னும் பந்தியில் அல்லது 4 (இ) (ii) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதி முடிவுறுவதற்கு முன்னர் மாவட்டப் பதிவாளர் ஒருவரிடமிருந்து திருமண அறிவித்தற் சான்றிதழொன்றை பெறுவதற்கு விரும்புகின்ற திருமணத்துக்கான எவரேனும் திறத்தவர் அப்பதிவாளரின் முன்னிலையில் நேரடியாகத் தோன்றுதல் வேண்டும் என்பதுடன் திருமணத்துக்கான சட்டமுறையான தடை அல்லது வேறு சட்டமுறையான தடங்கல் எதுவும் இல்லையென்ற பொருள்பட வெளிப்படுத்துகையொன்றைச் செய்து கீழொப்பமிடுதலும் வேண்டும்.

(ஆ) வெளிப்படுத்துகையானது வெளிப்படுத்துகையைச் செய்கின்ற திறத்தவரினால் செய்யப்படவேண்டியதான விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவின் எண்பிப்பாக மாவட்டப் பதிவாளரால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு ஒன்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவில் இத்தால் திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (அ) என்னும் பந்தியில், “சட்டமுறையான வேறு தடங்கலோ இல்லையென்றும்;” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “சட்டமுறையான வேறு தடங்கலோ இல்லையென்றும்; அத்துடன்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அதன் (இ) என்னும் பந்தியை (ஆ) என்னும் பந்தியாக மீள எழுத்திடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

''(1) கண்டியத் திருமணமொன்றில் அக்கறை கொண்ட ஆளொருவராகவுள்ள எவரேனும் ஆள் அது தொடர்பிலான திருமண அறிவித்தற் சான்றிதழொன்றின் வழங்குகைக்கு எழுத்தில் ஆட்சேபனை தெரிவிக்கலாம்.''; அத்துடன்

(2) அதன் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பந்தியை இடுவதன்மூலமும்:-

''(ii) அத்திருமணத்தில் அக்கறைகொண்ட ஆளொருவராக அவரது தன்மையில் ஆட்சேபனையாளர் ஆட்சேபனையைச் செய்கின்றாராவென்பதைக் குறிப்படுதல் வேண்டும்; அத்துடன்''.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு, இத்தால் திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் பந்தியில்-

(அ) அதன் (அ) என்னும் உட்பந்தியில், ''அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு அவ்வாறு வசித்தார் என்றும்;'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதிக்கு அவ்வாறு வசித்தார் என்றும்; அத்துடன்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அதன் (ஆ) என்னும் உட்பந்தியை நீக்கிவிடுவதன்மூலமும்;

(இ) அதன் (இ) என்னும் உட்பந்தியை (ஆ) என்னும் உட்பந்தியாக மீள எழுத்திடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அதன் (2) ஆம் பந்தியில்-

(அ) அதன் (அ) என்னும் உட்பந்தியில், ''அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு அவ்வாறு வதியவில்லை என்றும்;'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு அவ்வாறு வதியவில்லை என்றும்; அத்துடன்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அதன் (ஆ) என்னும் உட்பந்தியை நீக்கிவிடுவதன்மூலமும்;

(இ) அதன் (இ) என்னும் உட்பந்தியை (ஆ) என்னும் உட்பந்தியாக மீள எழுத்திடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவு, இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

''பொய்யான வெளிப்படுத்துகைகள் முதலியன

60. கண்டியத் திருமணமொன்று நிறைவேற்றப்படுவதனை அல்லது பதிவுசெய்வதனை செய்விக்கும் நோக்கத்துக்காக, இச்சட்டத்தின்கீழ் அறிந்துகொண்டு அல்லது வேண்டுமென்று ஏதேனும் பொய்யான வெளிப்படுத்துகையைச் செய்து கீழொப்பமிடுகின்ற அல்லது ஏதேனும் பொய்யான அறிவித்தலில் கையொப்பமிடுகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும்.''.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவைத் திருத்துதல்

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவு, "பராயமடையாதவர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

ஐயத்தைத் தவிர்த்தல்

**10.** ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, இத்தாற் பின்வருமாறு வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முன்னர் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் கண்டிய திருமணத்துக்கு ஏற்புடையனவாதலாகாது; அத்துடன்

(ஆ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவின் (2) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், (14 ஆம் அத்தியாயமான) சான்று கட்டளைச் சட்டத்தின் 112 ஆம் பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர, இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதன்பின்னர் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் கண்டியத் திருமணத்துக்கு ஏற்புடையனவாதலாகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**11.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.